கல்வி வரை எப்படியாவது, அரசாங்கம் எப்பாடுபட்டாகிலும், எவ்வளவு செலவு செய்தாலும், அந்தக் கல்வியை வழங்கு வதற்கு திட்டமிட்டு வழங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு மேல் மேல்நிலைப்பள்ளி, அதற்கு மேல் கல்லூரிகள், தொழில் கல்வி என்று வருகிறபோது, அதிலே பொது மக்களுடைய பங்கும் இணைய வேண்டுமென்றுதான் அரசாங்கம் விரும்பு கிறது. இப்போது இங்கே இருக்கிற கேள்வி அரசு உயர் நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுகிறீர்களா என்பது. ஏற்கனவே அங்கே ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி இருக்கிறது. மற்றும், எட்டு தனியார் மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் நீங்கள் ஒரு மேல்நிலைப் பள்ளிக்குள்ளே நுழைகிறபோது அவர்கள் மெட்ரிகுலேஷன் என்ற அந்தத் திட்டத்திலே நடத்துகிற பள்ளியாக இருந்தால் இங்கேயிருந்து போகிற மாணவர்களுக்கு அவர்கள் பரிட்சை வைக்கிறார்கள். இதுதான் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை. அந்த மெட்ரிகுலேஷன் என்பது அவர்களுடைய சொந்த விருப்பத்தின் அடிப்படையில் நடத்தப்படுகிற திட்டம். அதைத் தான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் கல்விகொள்கையைப் பொறுத்தவரையில், பொதுவாக இந்த உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் பொறுத்த வரையில் இதை சீர்படுத்த வேண்டும், ஒருங்கிணைந்த கொள்கை வேண்டுமென்று அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே, ஒரு பள்ளி தன்னுடைய மாணவர்கள் கெட்டிக்காரர்களாக விளங்க வேண்டும் என்ற அடிப்படையில், வெளியில் படித்து விட்டு வருகிற மாணவர்களுக்கு டெஸ்ட் வைக்கிறார்கள். அப்படி டெஸ்டிலே தேற வேண்டுமென்பது இயற்கையாக நாம் எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிற நியதிதான். ஆகவே அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இதிலே பணச்செலவு ஏற்படுகிறது. நிதிநெருக்கடிகள் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். 1,300 கோடி ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறோம். என்றாலும் மேல்நிலைப் பள்ளிக்காக இவ்வளவு நேரம் வாதிட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவேதான் அரசாங்கம் இதிலே மிகுந்த கவலையோடு இந்தப் பிரச்சினைகளை கவனித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அந்த டெஸ்ட் வைக்கிறார்கள் என்று சொன்னால், எந்த நோக்கத்தில் வைக் கிறார்கள் என்பதைப் பரிசீலித்து, அப்படி ஒரு தடை இருக்கு மானால், அந்தத் தடையைப் போக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 90. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

1991 செப்டம்பர் 27]

திருவத்தேவன் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டிடம்.

* 503. திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருவத்தேவன் கிராமத்தில் வேறு பக்கா கட்டடங்கள் இல்லாத காரணத்தால் இந்த கூட்டுறவுச் சங்கம் இயங்குவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ரெக்கார்டுகளைப் பராமரிப்பது பாதுகாப்பது போன்ற கஷ்டங்கள் இருக்கின்றன. இதிலே மாவட்டத்திலே பெரும்பகுதிஎல்லா இடங்களுக்கும் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்கு மீண்டும் பரிசீலனை செய்து திருவத்தேவன் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு கட்டடம் கட்ட அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவத்தேவன் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கடந்த 3, 4 ஆண்டுகளாக நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நிதியாதாரங்கள் தற்போது அந்த வங்கியில் எதுவும் இல்லை. ஆகவே, பொது நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டுகிற நிலைமைகள் தற்போது இல்லை. நிதியாதாரங்கள் வளர்ந்த பிறகு அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரத்தைப் பொறுத்தவரையில் எனக்கு மிக நன்றாகத் தெரியும். உங்களுடைய கஷ்டங்களோடு நானும் பகிர்ந்து கொண்டு, வருகிற ஆண்டாவது இதைச் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டிற்குள்ளாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்லபடியாக அந்தச் சங்கத்தை இயங்க வைப்பார்களானால் முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 91. திரு. மா. சுந்தரதாஸ். டாக்டர் எம். கருப்புசாமி. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.